நியாயமான விலைக்கு விற்பதனை உறுதிப்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதில் ஒரு பகுதியாக, தூசி நீக்கும் கருவி, தானிய தரம் பிரிப்பு கருவி, உமிநீக்கும் கருவி, தானிய மெருகேற்றும் கருவி மற்றும் மாவு அரைக்கும் கருவி ஆகியவைகள் நிறுவப்பட்டுள்ளன.

இம்மையத்தில் கருவிகளை நிறுவி, தேவையான நுட்ப ஆலோசனைகளை சிறுதானிய அறக்கட்டளை வழங்க இருக்கிறது. தமிழ்நாடு மற்றும் ஒடிசா மாநிலங்களில் 5000 விவசாயிகளின் சிறுதானிய மேம்பாட்டிற்கு பாடுபட்டு வரும் சிறுதானிய அறக்கட்டளையானது, இந்திய அளவில் 22 மாநிலங்களில் 500க்கு மேற்பட்ட இடங்களில் சிறுதானிய கருவிகளை சிறப்பாக நிறுவியதோடு மட்டுமல்லாது, ஸ்ரீலங்கா, ஆஸ்திரியா மற்றும் அமெரிக்கா போன்ற வெளிநாடுகளுக்கும் கருவிகளை வழங்கி வழிகாட்டி வருகிறது.

சிறுதானிய அறக்கட்டளையின் பணிகளைப் பாராட்டி கர்நாடகாவின் விவசாயத்துறையானது சிறுதானிய ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து 2019ம் ஆண்டு, தேசிய சிறுதானிய விருதினை வழங்கியுள்ளது.

சிறுதானிய மையம் மூலமாக மக்களுக்கு பல்வேறு வகையிலும் நன்மைகள் ஏற்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக,





விவசாயிகள் நல்ல வருவாய் ஈட்ட இருக்கின்றனர். தங்களின் உற்பத்தி பொருட்களுக்கு நல்ல விலை பெற்றிட உள்ளனர். சிறுதானிய நுகர்வினை அதிகப்படுத்துவதுடன், உடல்நலமும் பாதுகாக்கப்படவிருக்கிறது. நம் மண்ணுக்கே உரிய சிறுதானிய வகைகள் பயிரிடப்பட்டு உற்பத்திப் பெருக்கம் மேம்படவிருக்கிறது.

சிறுதானிய மையம் மூலமாக, சிறுதானியத்தை பெருக்குவோம், சிறுதானியத்தினை அனைவரும் உண்போம். ஆரோக்கியமாக வாழ்வோம். விவசாயிகள் ஒற்றுமை மூலம் பல சாதனைகளைப் படைப்போம்.

DHAN Foundation
Building Institutions for Generations

KVB Karur Vysya Bank
Smart way to bank
KVB CSR நிதி உதவியுடன்


**தானம் அறக்கட்டளை**
1ஏ, வைத்தியநாதபுரம் கிழக்கு
கென்னட் குறுக்குத் தெரு
மதுரை 625 016. தமிழ்நாடு
தொலைபேசி: +91 452 2302500
மின்னஞ்சல்: dhanfoundation@dhan.org
இணையதளம்:: www.dhan.org






DHAN Foundation
Building Institutions for Generations

KVB Karur Vysya Bank
Smart way to bank
KVB CSR நிதி உதவியுடன்

# சிறுதானிய மையம்
# Small Millet Centre



நம் முன்னோர்கள் சிறுதானியங்களைப் பல தலைமுறைகளாக பயிரிட்டு வந்தனர். தங்களின் உணவு வகைகளில் சிறுதானியங்களை சேர்த்துக்கொண்டதன் மூலம் உடல்நலத்தினை நன்முறையில் காத்து வந்தனர்.

நம் தலைமுறையில், சிறுதானியங்கள் பயிரிடுவதனை குறைத்துக் கொண்டதோடல்லாமல், உணவாக உண்பதனையும் மறந்துவிட்டோம்.

கொரோனா பெருந்தொற்றினால் உலகமே பாதிக்கப்பட்டது மற்றும் பன்னாட்டு சிறுதானிய வருடமாக 2023ம் ஆண்டினை கடைபிடித்ததன் மூலம் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டு சிறுதானியங்களை நோக்கி நம் பார்வை திரும்ப ஆரம்பித்துள்ளது.

தானம் அறக்கட்டளையானது, கரூர் வைசியா வங்கி நிதிஉதவியுடன் விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டாரத்தில், குறிப்பாக, பரளச்சி, செங்குளம், பூலாங்கால், நல்லாங்குளம் மற்றும் கீழ்க்குடி பஞ்சாயத்துக்களில் சிறுதானிய பயிர்களின் உற்பத்தி மற்றும் நுகர்வினை அதிகரிக்க உதவிடும் நோக்கத்தில் செங்குளம் பஞ்சாயத்தில் சிறுதானிய மதிப்பு கூட்டு மையம் ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது.

செங்குளம் சிறுதானிய மையத்தின் மூலம் மேற்கூறிய 5 பஞ்சாயத்துக்களில் உள்ள 11 கிராமங்களில் கேப்பை, குதிரைவாலி, வரகு, சாமை, திணை, பனிவரகு போன்ற பயிர்களின் உற்பத்தியினை பெருக்கும் பொருட்டு அரசு நிறுவனங்களின் திட்டங்களை கிடைக்கச் செய்வதோடு, நிலையான மக்கள் அமைப்பை ஏற்படுத்தியும் நிலையான உற்பத்தி பெருக்கத்தினை ஏற்படுத்திட செய்வதற்கான ஆராய்ச்சிகளிலும் ஈடுபடஉள்ளது.

செங்குளம் சிறுதானிய மதிப்புக் கூட்டு மையத்திற்கான வழிகாட்டுதல் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை தானம் அறக்கட்டளையால் உருவாக்கப்பட்டு, அரசில் பதியப்பட்டு, திருச்சுழி பகுதியில் இயங்கிவரும் திருச்சுழி ஜீவிதம் பெட் உழவர் உற்பத்தியாளர் கம்பெனி லிமிடெட் (U01110TN2021PTC145429) வழங்க இருக்கிறது.

விவசாயிகள், பொதுமக்கள், இளைஞர் மற்றும் இளைஞிகள் போன்றோருக்கு சிறுதானியங்களின் முக்கியத்துவத்தினை விளக்கி அதன்மூலம் நுகர்வினை உறுதிப்படுத்தும் பொருட்டு சிறுதானியப்பயிற்சி, சிறுதானிய உணவு மற்றும் திண்பண்டங்கள் (snacks) தயாரித்தல், சிறுதானிய உணவு தயாரிப்புப் போட்டி ஆகியவைகள் சிறுதானிய மையம் மூலம் நடத்தப்படும்.

மேலும், விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த சிறுதானியங்களை மதிப்பு கூட்டுதல் செய்து